★ விலை ரூபா 1-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்


# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஐப்பசி 6 முஹறம் 5 இதழ் 252
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23—10—82



பாரத் ஸ்ருடியோ
அன்பளிப்பு

இன்று மாலை

வீரசிங்கம் மண்டபத்தில்

''இலங்கை வேந்தன்''

டிக்கட் மண்டப வாசலில்.
4922


## "தமிழர் பிரச்னை: ஜே. ஆருக்கு ஒரு சவால்!"

### இந்திய ஆங்கில ஏடு கருத்து

புதுடில்லி, அக் 22

இலங்கை தமிழ் பேசும் மக்களின் தீர்வு காணப்படாத பிரச்னை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. ஜே ஆர் ஜயவர்த்தனவின் மதிநுட்பத்துக்கு ஒரு சவாலாக எதிர்நோக்குகிறது என்று இந்திய அரசுசார்பு பத்திரிகையான 'நாஷனல் ஹாரல்ட்' இன்றைய தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

# ஈழக் கோரிக்கைக்கு எதிராக வடக்கு கிழக்கில் தமிழர் வாக்களித்தனர்

## செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி ஜே. ஆர். கருத்து

### "அரசு-கூட்டணி பேச்சு மீண்டும் ஆரம்பம்"

(கொழும்பு)

''ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்; குறிப்பாக யாழ்ப்பாணத்தில், தமிழ் மக்கள் ஈழக் கோரிக்கைக்கு எதிராக வாக்களித்துள்ளனர். வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் உத்தேச தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை''

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்றுக் காலை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டார். இம் மாநாட்டில் வெளிநாட்டு பத்திரிகை நிருபர்களை மட்டும் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி நிருபர் ஒருவர் கேள்வி கேட்டபோது ''தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண விரும்புகின்றேன். அவர் தனது முக்கிய பிரச்னைகளை அறிந்து தீர்த்து வைப்பதே எனது நோக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் விரைவில் மீண்டும் உயர்மட்டப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்று நம்புகின்றேன். பேச்சுக்கள் மூலம் முக்கிய பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முடியும் என்று கருதுகின்றேன்'' என்று பதிலளித்தார்.

அடுத்தாண்டு மார்ச் மாதத்தில் புதுடில்லியில் நடக்கவிருக்கும் அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளும் போது, இங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்புவோரின் பிரச்னை குறித்து பேச விருப்பதாகவும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தினால் ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் அதனை எப்படித் தீர்த்து வைக்கலாம் என்பது குறித்தும் புதுடில்லியில் சம்பந்தப்பட்ட இந்தியத்தலைவர்களுடன் தாம் பேசவிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## "ஐ. தே. கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஆதரவு அதிகரித்துள்ளது"

(யாழ்ப்பாணம்)

''ஐக்கிய தேசியக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஆதரவு அதிகரித்து வருவதை, நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் நிரூபித்துவிட்டது''. என்று ஐக்கிய தேசியக்கட்சி யாழ். தொகுதி பிரதம அமைப்பாளர் திரு. ஆர் ஆர் நல்லையா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''கடைசியாக நடைபெற்ற யாழ். மாநகராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டு 5,066 வாக்குகள் பெற்றது

''அதன்பின்னர் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் யாழ். தொகுதியில் 2,526 வாக்

[8ம் பக்கம் பார்க]

## 'தமிழ்ஈழ இலட்சியத்திற்காக 'தமிழர் படை' அமைப்பேன்"

### -குமார்

[யாழ்ப்பாணம்]

''தமிழ் ஈழ லட்சியத்திற்காகத் தொடர்ந்து உழைக்க உறுதி பூண்டுள்ளேன். இந்த லட்சியத்திற்காக வாக்களித்த மக்களுக்கு நன்றி கூறுவதுடன் மேலும் கூடுதலான மக்களைத் தமிழ் ஈழ லட்சியத்தின்பால் அக்கறையுள்ளவர்களாகச் செய்யவும், அதற்காக உழைக்க 'தமிழர் படை'யையும் உருவாக்க என்னாலான முயற்சிகளைச் செய்துவருவேன்''.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ் ஈழ இலட்சியமே தமது இதய இலட்கியம் என்பதை எவ்வித அச்சுறுத்தலுக்கும் அஞ்சாது, ஜனாதிபதி தேர்தலில் எனக்கு வாக்களித்ததன் மூலம் வெளிப்படுத்திய வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாகக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் அமைச்சர்களின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கட்சிபேதங்களை மறந்து தமிழர் என்ற இன உணர்வுடன் தமிழ் ஈழ இலட்சியத்திற்காக வாக்களித்துள்ளார்கள். இவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்

[8ம் பக்கம் பார்க்க].

## 'சுதந்திரன்' சீல் வைப்பு:

## அப்பீல் நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல்

[கொழும்பு]

''சுதந்திரன்'' பத்திரிகை சீல் வைக்கப்பட்டது சட்ட விரோதமான செயலென தீர்ப்பளிக்கும்படி கோரி ரிட்' மனு வொன்றை அப்பத்திரிகையை வெளியிடும் நிறுவனத்தின் சார்பில் சட்டத்தரணி எஸ். பேரின்பநாயகம் நேற்று கொழும்பு அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

ராஜாங்க அமைச்சரின் காரியதரிசி திரு, டொன் ஜோன் பிரான்ஸிஸ் லியனகே ஐ ஜி பி. திரு. ருத்ரா ராஜசிங்கம் ஆகிய இருவரும் முதலாம், இரண்டாம் எதிர்மனுதாரர்களாக இந்த ரிட்மனுவில் காட்டப்பட்டுள்ளனர். (இ)

## "சுதந்திரன் சீல் வைப்பு அரசியல் பழிவாங்கல்!"

### ஆசிரியர் விடுத்துள்ள அறிக்கை

[யாழ்ப்பாணம்]

'சீல்' வைக்கப்பட்டுள்ள 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. கோவை மகேசன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

''சிறீலங்கா ஜனாதிபதி தேர்தலின் போது தமிழீழ மக்களை பங்குபற்ற வேண்டாமென்றும் தேர்தலைப் பகிஷ்கரிக்குமபடியும் தனக்குரிய எழுத்துச் சுதந்திரத்தை முழுமையாகப்பயன்படுத்தி சுதந்திரன் பிரசாரம் செய்து வந்தது. அத்துடன் ஐ. தே க. அரசினால் ஆக்கப்பட்ட பயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் படும் இன்னல்களை அச்சமின்றி அம்பலப்படுத்திவந்தது. இதனால் ஆத்திரம் கொண்ட அரசு அரசியல் பழிவாங்கும் நோக்குடன் அவசரகாலச்சட்டத்தைப் பிறப்பித்து முதல் வேலையாக இரவோடு இரவாக 'சுதந்திரன்' அச்சகம் சீல் வைக்கப்பட்டது. இது ஜனாதிபதிகூறும் கருத்துச் சுதந்திரம், பிரசுர சுதந்திரம் ஆகியவற்றை மீறும் அரசியல் பழிவாங்கலாகும். அடிப்படை ஜனநாயக சுதந்திரங்கள் தமிழர்களுக்கு இல்லை என்பதையே அரசின் இச் செய்கை எடுத்துக்காட்டுகின்றது. [மா]

## "வடக்கு ஒரு வரலாற்றை தோற்றுவித்துவிட்டது"

(யாழ்ப்பாணம்)

''இலங்கை ஜனாதிபதி தேர்தலில் ஒரு வரலாற்றையே தோற்றுவித்துவிட்டார்கள் வடபகுதிமக்கள்!'' என்று சிறீலங்கா சுதந்திரக்கட்சி வடபகுதி அமைப்பாளர்கள் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்த பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும் போது, குறிப்பிட்டனர்.

''வடக்கில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி 77,300 வாக்குகள் பெற்றுள்ளன. இந்த முடிவு தமிழ் பேசும் மக்களின் ஆதரவையும், எம்மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதையும், அரசின்மீதுள்ள வெறுப்பையும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது'' என்றும் வடபகுதி சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

''யாழ். மாவட்டத்தில் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு தமிழ்மக்கள் மிகப்பெருமளவில் வாக்களித்ததோடு, ஐ தே கட்சியைத் தோற்கடித்த பெருமையையும் பெறுகின்றது. தமிழ் பேசும் மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்யவேண்டுமென்ற உணர்வையும், உத்வேகத்தையும் எமது கட்சிக்கு ஏற்படுத்துகிறது'' எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

''யாழ். மாவட்ட மக்களின்

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

திறமையும், அனுபவமும், நேர்மையும் உள்ள விற்பனையாளர்கள் தேவை. அத்துடன் மும் மொழிகளிலும் பயிற்சிபெற்ற கணக்குப்பிள்ளை தேவை. இம் மாதம் 25-10-82 க்குமுன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரில் வரவும். சீமாட்டி ஜவுளி சமுத்திரம், இல. 158, நவீனசந்தை, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 4891

அலுமினிய தொழிற்சாலை ஒன்றுக்கு வேலை பழக ஆண்களும், காசாளராகவும், எழுதுவினைஞராகவும் கடமையாற்றக்கூடிய பெண்களும் உடன் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்க. விளம்பர இல. 4908, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 4908

## விற்பனைக்கு

நேரடியாக இறக்குமதி செய்த புனரமைக்கப்பெற்ற CD 125, C 90, C 70 HONDA மோட்டார் சைக்கிள்களும், DELICA வான்களும், ELF ISUZU டிரக் வண்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4857

டயனியர் ஸ்பீக்கர் மியூசிக் சிஸ்ரம் விற்பனைக்குண்டு. 23ம், 24ம் திகதி பார்வையிடலாம். 15/2, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. 4915

கொம்மர் 24 ஸ்ரீ 3 1/2 தொன் 'பொவட் கொன்ரோல் லொறி' இஞ்சினும், பிரேக்கும் பழுதுபார்ப்பதற்காக கழுவப்பட்ட நிலையில் உள்ளது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடம்: நஷனல் டீசல் இஞ்சினியர்ஸ், 109, வடக்கு சிவன்கோவில் வீதி, யாழ்ப்பாணம். கேள்விகள்: முகாமையாளர், லங்கெம் சிலோன் லிமிட்டெட், 219, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 4904

1 சிறி A/35 முற்றிலும் திருத்தியமைக்கப்பட்ட சொந்தப் பாவிட்பில் உள்ள கார் விற்பனைக்குண்டு. கலனுக்கு 45 மைலுக்கு மேலாக ஓடக்கூடியது, தொடர்பு: 834, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4918

## பயிற்சி

மோட்டார் மெக்கானிக் பயிற்சி 25-10-82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 9/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4906

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற விசுவலிங்கம் அழகக்கோன் கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

என்பவரின் மரண சாதனத்தின் விடயத்தில் மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. ரி/3682

விசுவலிங்கம் அழகக்கோன் கைம்பெண் சிவயோகேஸ்வரி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றூனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்)
தா குலஞானம்
பதிவாளர்

1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19-ந் நாளாம் இன்று தேதியிடப்பட்டது. 4911

## மின்சாரம்

(மன்னார்)

மன்னார்-சன்னிவிலேற் மின்சார நிலையத்திலிருந்து எருக்கலம்பிட்டி, தாராபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கும் விரைவில் மின்சாரம் வழங்கப்படும்.

## நவராத்திரி விழா

(பண்டத்தரிப்பு)

சித்தங்கேணிகலைநகர்நேருஜி சனசமூக நிலையத்தில் நவராத்திரி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது 26ம் திகதி பூர்த்தி விழா நடைபெறவுள்ளது.

## வாசகர்களுக்கு பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

சர்வோதய படிப்பகத்தில் கூடுதலான புத்தகங்களைப் பெற்று படித்த வாசகர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் சர்வோதய வாசகர் வட்டம் பரிசில்கள் வழங்கியது.

புங்குடுதீவில் உள்ள சர்வோதய தலைமைச் செயலகத்தில் நடந்த இப்பரிசளிப்பு விழாவில் ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

இதில் முதலாவது பரிசை கிராஞ்சி மகாதிமா சிறுவர் இல்லமும், இரண்டாவது பரிசை வல்லன் ஐயப்பன் சிறுவர் இல்லமும், மூன்றாவது பரிசை வீரம்புளியடி சிறுவர் இல்லமும் பெற்றன.

கூடுதலான புத்தகங்களைப் படித்து திருப்பிய சிறுவர்கள் இப்பரிசில்களைப் பெற்றனர், ஒன்பது சிறுவர்களுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டன.

சர்வோதய வாசகர் வட்டம் சர்வோதய படிப்பகத்தினூடாக புத்தக விநியோகம் செய்வதை விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் வாசகர்களை ஊக்குவிக்கும் முகமாக இப்பரிசளிப்புத் திட்டத்தையும் கொண்டு வந்துள்ளது.

(வண்-நிரு)

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுள்ளது)


சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றுச் சாக்குகள், 120 பைக்கெற்றுகளுக்கு மேற்பட்ட கோழித்தீனி, 1000 கிலோகிராம் குறுணல் அரிசி, வெற்றுப்பரல் ஆகியன கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-ம், ஏனைய வற்றுக்கு ரூபா 100/-ம் மீளளிப்பு வைப்புப் பணமாக சங்கத்தில் செலுத்தி கேள்விப் பத்திரங்களை சங்க வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

29-10-82 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் சங்கத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்,

பொதுமுகாமையாளா
21-10-82. 4914



இலங்கையில் வசதியும் வாய்ப்பும் உள்ள இடங்களில் நிலக்கடலையைப் பயிரிடுமாறு கோரி, நிலக்கடலை சம்பந்தமாக சிறியபுத்தகத்தை தொழிலதிபர் திரு க.கனகராசா வெளியிடுவதையும், அதன் முதல் பிரதியை திரு. அ அரசசிங்கம் பெற்றுக்கொள்வதையும் மேலே உள்ள படத்தில் காண்க.

## சர்வோதய இயக்கத்தின் திட்டங்களுக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"பாராளுமன்ற உறுப்பினர்களால் செய்ய முடியாத வேலைத் திட்டங்களை, சாதனைகளை, சர்வோதய இயக்கம் எமது பகுதிகளில் செய்துவருகிறது. இதன் சேவை மிகவும் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்."

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் புங்குடுதீவில் நடந்த சர்வோதய சிட்டிமுப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இவ்விழாவில் இடம்பெற்ற சிறுவர் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற சிறுவர்களுக்கான பரிசில்களையும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் வழங்கினார். புங்குடுதீவில் உள்ள சர்வோதய மாவட்ட தலைமைச் செயலக முன்றலில் நடந்த இவ்விழாவில் பண்டிதர் இரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கடந்த காலங்களில் சர்வோதய இயக்கம் தென்னிலங்கையில் மட்டுமே வலுப்பெற்றிருந்தது.

"அரசாங்கம் ஒரு திட்டத்திற்கு நிதியை ஒதுக்கினால் அந்த நிதியில் மூன்றிலொரு

(7-ம் பக்கம் பார்க்க)

உ

## திருமண அழைப்பு

மணமகன்:
செல்வன் நா. நித்தியானந்தன்
(போர்மன், சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)
மணமகள்:
செல்வி ஈ. தனலக்ஷ்மி
இடம்:
வீரசிங்கம் மண்டபம்
காலம்:
24-10-82 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:
12-05 முதல் 1-49 (பகல்)
உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி தையல்நாயகி நாகரத்தினம், நொத்தாரிஸ் ஒழுங்கை, வட்டுக்கோட்டை கிழக்கு. (4909)

திரு/திருமதி சி. ஈசுரபாதம், (இளைப்பாறிய தபாலதிபர்), 248, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை மக்களது நல்லாசியுடன்

20-வது ஆண்டு வெற்றிப்பவனியில் இன்று நாம் காலடி எடுத்துவைக்கின்றோம்.

கடந்த காலங்களில் எமக்கு ஆதரவு நல்கிய அனைவருக்கும்
இதயம் கலந்த நன்றி உரித்தாகுக

எமது புதிய தயாரிப்பான "என்ஜ" சைக்கிள் ரயர், ரியூப்புக்கள் வெகு விரைவில் விற்பனைக்கு வருமென்ற நல்ல செய்தியை மகிழ்வோடு அறிவிக்கின்றோம்.

நோர்தேண் இன்டஸ்ரீஸ்
(ரயர் நிரப்புபவர்கள்)
112, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 23158 4916

துப்பாக்கிச்சூடு - குண்டுவெடிப்பு சம்பவங்கள் மத்தியில்

# வட அயர்லாந்தில் தேர்தல் நடைபெற்றது!

லண்டன், அக். 22

வட அயர்லாந்தில், நேற்று துப்பாக்கிச் சூடுகள், குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு மத்தியில் தேர்தல் நடத்தப்பட்டது.

அதே நேரத்தில் குண்டு வெடிப்பு, தாக்குதல்களுக்குத் தாமே பொறுப்பு என்று அயர்லாந்தின் மார்க்ஸிஸ ஐரிஷ் தேசிய விடுதலைக் கொரில்லா இயக்கம் அறிவித்துள்ளது.

''பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்து அயர்லாந்து பூரண விடுதலை பெற்று ஐக்கிய அயர்லாந்தாக மலர வேண்டும்'' என்னும்கோரிக்கையை நீண்டகாலமாக முன்வைத்து மார்க்ஸிஸ ஐரிஷ் தேசிய விடுதலை இயக்கம் செயற்பட்டுவருகின்றது.

இத்தேர்தலில் வட அயர்லாந்து மக்கள் வாக்களிப்பதன் மூலம்தனிநாடுகோரும் கோரிக்கைக்கு எவ்வித விமோசனமும் இல்லை.என்பதே ஐரிஷ் தேசிய விடுதலை இயக்கத்தினரின் கொள்கை.

ஆனல் இத்தேர்தலில் பிரிட்டிஷ் சார்பு வாதிகளே போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ஜம்போ விமானத்தை பூனைகலக்குகிறது!

கன்பரா, அக். 22

பிஜித் தீவிலிருந்து புறப்படவிருந்த ஆஸ்திரேலிய ஜம்போ ஜெட் விமானமொன்றுக்குள் பூனையொன்று இருப்பதால் குறிப்பிட்ட நேரத்திற்கு இவ்விமானம் புறப்பட முடியாத நிலையில் இருந்துவருகின்றது.

பிஜித் தீவுகளுக்கு வருமுன்னர் பிறிஸ்பேன், சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இந்த விமானம் தரித்து நின்றது எனவே இப்பூனையும் இந்த இரு இடங்களில் ஒன்றிலிருந்து விமானத்தினுள் ஏறியிருக்கலாமென ஊகிக்கப்படுகிறது.

பூனையைவெளியே வரச்செய்யும் விதத்தில், பிஜித்தீவு விமான நிலைய அதிகாரிகள் பால், மீன் போன்றவற்றை அதற்குக் கொடுத்தபோதிலும் அது வெளியே வர மறுத்து வருகின்றது.

விசர் நோய் இப்பூனைக்குப் பீடித்திருக்கலாமென்றும், பிடிக்கச் செல்பவரை அது கடித்துவிடலாமென்றும் அதிகாரிகள் பீதி கொண்டுள்ளதாலேயே அதனை அணுக அவர்கள் பின்வாங்கிவருகின்றனர். (கி)

## செங்கல்பட்டு மோசமாக பாதிப்பு!

சென்னை, அக். 22

தமிழ்நாட்டில் அண்மையில் வீசிய புயலினாலும் மழையினாலும் செங்கல்பட்டுப் பகுதி மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேரில் சென்றுபார்வையிட்டு உடனடியாக நிவாரணங்கள் வழங்க உத்தரவிட்டார்.

செங்கல்பட்டில்மட்டும் 2000 குடிசைகள் முழுமையாக அழிந்து மக்கள் இருப்பிடம், உணவு, குடிநீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு குடும்பத்துக்கு 200 ரூபாவும், 5 கிலோ அரிசியும், உடுப்புகளும், தமிழக முதல்வரினல் உடன் வழங்கப்பட்டது.

நூற்றுக் கணக்கான கால் நடைகள் வெள்ளத்தால் அள்ளுண்டதாகவும், 42 மின் கம்பங்கள் முற்றாக சேதமடைந்துவிட்டதாகவும், துண்டிக்கப்பட்ட மின்இணைப்புகள் செப்பனிடப்பட்டுவருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு லொறிகள் மூலம் குடிநீர்வழங்கப்படுகின்றது. நோய் பரவாது தடுக்கும் வேலைகளைச் சுகாதாரத்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (உ)

## "பாரத-சோவியத்உறவு உலக அமைதிக்கு வழிவகுக்கும்"

புதுடில்லி, அக். 22

''பாரத - சோவியத் நாடுகளின் நட்புறவு மேலும் வலுப்பெற்று வருவது, உலக அமைதிக்கும், பாரதத்தின் அபிவிருத்திக்கும் சிறந்த செயற்திட்டமாக விளங்குகின்றது.''

இவ்வாறு திரு. ராஜீவ்காந்தி நேற்று இரவு புதுடில்லியில் நடைபெற்ற ஒரு வரவேற்பு உபசார நிகழ்ச்சியில் கூறியுள்ளார்.

பாரதத்துக்கு விஜயம் செய்துள்ள சோவியத் நாட்டு இளைஞர் குழுவுக்கு புதுடில்லியில் நேற்று இரவு பாரத அரசினல் வரவேற்பளிக்கப்பட்டது. இவ்வைபவத்தில்தான் திரு.ராஜீவ் காந்தி உரையாற்றினர். (உ)

பத்திரிகை மசோதாவை எதிர்த்து

# பாரத பத்திரிகையாளர் போர்க் கொடி!

புதுடில்லி, அக். 22

''பாரதத்தில் பத்திரிகைச் சுதந்திரப் போராட்டம் தொடர்ந்து பெருமளவில் நடைபெறும். அரசின் எத்தகைய கெடுபிடிகளுக்கும் உட்படாது பாரத பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக இயங்குவார்கள். இதற்கான போராட்டத்தில் எந்தத்தடைகளையோ, சவால்களையோ சந்திக்க பாரதப் பத்திரிகையாளர் தயார்.''

இவ்வாறு நேற்று முன்தினம் பீகாரில் நடைபெற்ற பத்திரிகையாளரின் பெரும் ஊர்வலத்தில் தேசிய பத்திரிகையாளர் சம்மேளனத் தலைவர் திரு ஏ. ராகவன் தம்பிவர்மா எச்சரித்தார். பத்திரிகையாளர் ஊர்வலத்தில் பாரதத்தின் சகல பகுதி பத்திரிகையாளரும்பங்கு கொண்டிருந்தனர்.

பிரச்னைக்குரிய பத்திரிகை மசோதாவுக்கு எதிர்ப்புத்தெரிவித்து பீகார் மாநிலத்தில் ஊர்வலம் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் திரு. ராகவன் தம்பிவர்மா தலைமையில் அரசுக்கு எதிராகப் பெரும் ஊர்வலம் நடைபெற்றது.

பாரத மத்தியதுறை தகவல் அமைச்சர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் இப்பத்திரிகை மசோதா ராஷ்டிரபதியின் அங்கீகாரம் பெற்று சட்டமாகமுன்னர் பத்திரிகையாளரின் கருத்தை முழுமையாகப் பெற்றே சட்டமாக்க வசதி செய்யப்படும்'' என்று நேற்று ராஜ்ஜிய சபையில் அறிவித்துள்ளார். [உ]

## தெ. ஆபிரிக்காவில் அதிகரித்து வரும் நெருக்கடி நிலை!

தடுக்காது போனல் இரத்தவெள்ளமாம்!

நைரோபி, அக் 22

''தென்னாபிரிக்க நிலைமை குறித்து அமெரிக்கா வெளியிட்டுவரும் மதிப்பீடுகள் நம்பிக்கை தருவதாகத் தோன்றினாலும், இவை யாவும் உலக பொதுஜன அபிப்பிராயத்தைத் தவறான வழியில் செலுத்துவதாகவேயுள்ளது'' என்று பத்திரிகையாளர் திரு. குறித்சின் தென்னாபிரிக்க, நமிபியா நிலவரம் குறித்து கண்டனம்தெரிவித்துள்ளார்.

''அமெரிக்காவும் இதர சில மேற்குலக நாடுகளும் தென்னாபிரிக்காவுக்கு அனுசரணையாக இருக்கின்றன. தென்னாபிரிக்க அரசுக்கெதிரான தடைகளைக் கொண்டுவரும் ஐ. நா. வின் முடிவுகளை இவை மீறியே தென்னாபிரிக்காவுக்கு எண்ணெய், ராணுவ சாதனங்கள், ஆயுதங்கள் மற்றும் பொருட்களை அளித்துவருகின்றன.

தென்னாபிரிக்காவுக்கு வேண்டிய உதவிகளையளித்துவரும் வாஷிங்டன், தென்னாபிரிக்காவின் தாக்குதல்களுக்குள்ளானவர்களுக்கும் நமிபியாவுக்கும் இதர நாடுகள் உதவியளிக்கக்கூடாது என்று வலியுறுத்துவதுடன் நாமிபியாவின் தலைவிதியைத் தென்னாபிரிக்காவின் கைகளில் கொடுக்கவும் முனைகிறது. ஆனலும் தென்னாபிரிக்காவின் நிறவெறி அரசுக்கு எதிரான எதிர்ப்புகள் ஆபிரிக்கக் கண்டத்தில் அதிகரித்து வருகின்றது. இந்த இனவெறியர்களது நடவடிக்கைகளைத் தடுக்காதுபோனல் இங்கும் மத்தியகிழக்குப்போன்று ரத்தவெள்ளம் பெருக்கெடுத்தோடவேசெய்யும் என்று அவர் தமது விமர்சனத்தில் எழுதியுள்ளார்.

## ரங்கநாதன் மறைவுக்கு அனுதாபம்

சென்னை, அக். 22

தென்னிந்தியப் பத்திரிகையாளர் சங்கத்தலைவரும், முன்னள் 'இந்து' ஆங்கிலத் தினசரியின் ஆசிரியருமான திரு. ரங்கநாதனின் மறைவுகுறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

''சிறந்த பத்திரிகையாளரும் பத்திரிகை உலகின் உற்ற துணைவரும், வழிகாட்டியுமான திரு ரங்கநாதனின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்'' என்று பாரத பத்திரிகையாளர் சம்மேளனம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

சென்னையில் நடைபெற்ற திரு. ரங்கநாதனின் அனுதானின் அனுதாபக் கூட்டத்தை தென்னிந்தியப் பத்திரிகையாளர் சங்கமும், பாரத பத்திரிகையாளர் சம்மேளனமும் ஒழுங்குசெய்திருந்தன. (உ)




றுமிக்கோ
நாடறிந்த வர்ணக் குடும்பம்
தேடி வருகிறது உங்களை
யாழ்ப்பாணத்தில்

றுமிக்கோ இலச்சினை கொண்ட பொருட்கள்
உங்களுக்குப் புதியன வல்ல

- றுமிக்கோ இமல்சன் பெயின்ட்
- றுமிக்கோ வார்ணிஷ்
- றுமிக்கோ தின்னர்
- றுமிக்கோ மெத்திலேட்டட் ஸ்பிரிட்
- றுமிக்கோ டர்ப்பன்டைன்

ஆகிய இத்தனையும், நீங்கள் இதுவரை கொழும்பிலும் மற்று மிடங்களிலும் இருந்து தருவித்து உபயோகப் படுத்தி மகிழ்ந்தவையே. இத் தரமிக்க பொருட்களை நீங்கள் உங்கள் கட்டிட, மற்றும் பூச்சு வேலைகளுக்கு இனிமேல் இலகுவாக யாழ்ப் பாணத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்
மனையழகு மிளிர உங்கள் மனைநாடி வருகிறது, தரமிக்க, நாடறிந்த றுமிக்கோ வர்ணக் குடும்பம்
சகாய விலைகளில், எல்லாப் பெயின்ட் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்

RUMECO INDUSTRIES LIMITED
15, MELBOURNE AVENUE, COLOMBO 4.
TEL: 580632 T'GRAMS - "NORWES COLOMBO"

## மணிவாக்கு

நாம் அனுபவித்தே தீரவேண்டியவைகளுக்கு வீணாக வாதமிட்டு எதிர்ப்பதில் பயன் கிடையாது. வாடைக் காற்று வீசும் போது பேசிப் பயன் இல்லை. இறுகப் போர்த்துக் கொள்வதொன்றே நாம் செய்ய முடிந்தது. — லவல்

# நமது நோக்கு

## நெப்போலியன் நினைவு

ஜனாதிபதி தேர்தலையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் அமோக வெற்றியையும் நினைக்கும்போது உலகை ஆட்டிவைத்த நெப்போலியன் நினைவு வருகின்றது.

ஜனாதிபதிக்குப் போட்டியாக வந்த திரு. ஹெக்டர் கொப்பெக்கடுவ இதுபற்றிக் குறிப்பிட்டிருந்ததை நாம் கருதவில்லை.

மகா வீரன் நெப்போலியன் வாட்டர்லூ சண்டையில் தோல்வியடைந்ததும், இறுதியில் ஆங்கில வீரன் வெலிங்டன் வெற்றியடைந்ததையும் குறிப்பிட்ட ஹெக்டர் தம்மை வெலிங்டனுக்கு ஒப்பிட்டுப் பேசியிருந்தார்.

வீரத்துக்கு நெப்போலியன் என்பது உலகெங்கும் தெரிந்தபடியால் காவல் நாய்களுக்கே அப்பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

தேர்தல் களத்தில் ஜே. ஆர். காட்டிய ஆற்றலும் அனுபவமும் அவர் ஒரு குட்டி 'நெப்போலியனெ'னக் கொள்ள இடமளிக்கின்றது.

ஆனால் நாம் எடுத்த உவமானத்தின் அடிப்படை வேறொன்று.

நெப்போலியன் ரஷ்ய சண்டைக் களத்தில் அடைந்த தோல்வி பற்றி.

நாமெல்லோருமே ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மகத்தான வெற்றி பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் குதூகலத்தில், எல்லாவிடங்களிலும் வெற்றிவாகை சூடிய நெப்போலியன், அவருக்குப் பின் ஹிட்லர் மாஸ்கோவில் மண் கவ்வியது போல், ஜனாதிபதி ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்திலே தோல்வி கண்டாரென்பதை நினைவுறுத்தல் வேண்டும்.

தமிழ் மக்களின் தலைநகரம் மட்டுமல்ல, தமிழ்ப் பிரச்னையின் போர்க்களமான யாழ்ப்பாணத்தில் மட்டும் திரு. ஜெயவர்த்தனாவிற்கு வெற்றி கிடையாதது இந்த உண்மையை விளக்குகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணத்தில் இதுகாறும் தலைநிமிர்த்தவில்லை; இந்தமுறை ஜே. ஆரை இங்கு தோற்கடிக்க முடிந்ததற்கு முக்கிய காரணம் அவர் இயற்றிய பயங்கரவாத தடைச் சட்டம்.

''பங்குபற்றுவதில்லை'', ''பகிஷ்கரிப்பது'' என்ற தீர்மானங்கள் யாழ்ப்பாணத்தில் சுமார் ஒன்றரை லட்சம் வாக்காளர்களை வீட்டுக்குள் பூட்டிவிட்டன. இவற்றையும கூட்டினால் ஆட்சிக்கு யாழ்ப்பாணத்தின் எதிர்ப்பு, தமிழ் மக்களின் அரசியல் மனநிலையை விளக்கும்

மட்டக்களப்பு; மூன்று தமிழ் அமைச்சர்கள் 'முயன்ற' போதும் ஆட்சிக்கு எதிராக 57 சதம் மககளின் வாக்குகள் கணிக்கப்படவேண்டியது அங்கும் பகிஷ்கரிப்பு ஓரளவிற்கு செயற்பட்டது; வாக்களித்தவர்களின் பெரும்பான்மையோர் அரசுக்கு எதிராகவே வாக்களித்தனர்

ஒரே ஒரு தமிழ் [illegible]ளர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்கு தமிழ[illegible]ளில் கிடைத்த பெருந்தொகை வாக்குகள் பொது மக்கள் எவ்வளவு தூரம் அரசில் அவநம்பிக்கை கொண்டுள்ளன ரென்பதை விளக்கும். அதே சமயம் தமிழர் விடுதலைக் கூட்டணி இத்தேர்தலையிட்டு எடுத்த முடிவு விவேகமற்றதென்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா அரசியல் பெருநோக்குடையவர்; அவருடைய அபிவிருத்தித் திட்டக் கொள்கைகளு[illegible]ள் ஆதரவளித்திருப்பது தேர்தல் [illegible]ப்படை. கடந்த ஐந்து வருடங்களில் பல இ[illegible] மத்தியில் சிங்களப் பொது மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் தனிப்பட்ட முறையில் அவரில் நம்பிக்கையற்றவரௌன்று கொள்வதுதகாது.

எனவே தீராத நோய் போலிருக்கும் பகைமைக்கு ஆதாரம் எங்கே?

''யாழ்ப்பாணத்தின்பயங்கரவாதம் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும்'' என்று அவர் இட்ட சட்டம் கைகூடவில்லை; துவேஷத்தை ஊட்டியது; பயங்கரவாதம் அதன் உடன் பிறப்புக்களான கொலை, கொள்ளை தீ, வழிப்பறி முதலிய அக்கிரமங்கள் நாளுக்குநாள் அதிகரித்தன; பூண்டோடு ஒழிவதை விட்டு, பயங்கரவாதம் ஆல் போல் தழைத்து அறுகு போல்வேரூண்டத் தொடங்கின; இதற்கு மாற்று வைத்தியம் வேண்டும்.

யாழ்ப்பாணத்து மக்கள் எவரும் விரும்பாத கொடுமையான சூழ்நிலை பரவி அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது. இதுவே இன்றைய நிலை,

மக்கள் பாதுகாப்பு வட்டம்; அபிவிருத்தி சூன்யம், அபிவிருத்திச்சபை ஒரு ஏமாற்றம்.

இலங்கை ஜனாதிபதியாக திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனதெரி[illegible] பட்டாரென்ற அறிவித்தலை முந்த நாள் 'சிங்களத்துல்மட்டும்' அறிவித்த இலங்கை வானொலி, 1956ல் பிரதமர் [illegible]ண்டாரநா[illegible]யக்காகொண்டு வந்த சட்டத்தை இரை மீட்கின்றதா?

இலங்கை மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதியான, திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டாரென்று தமிழில் அறிவிக்கப்படாத குற்றம் பாரதூரமானது. வருங்கால இருளுக்கு ஒரு அபசகுனமா?

மக்கள் இது சிங்கள அரசு என்று அறியாமையாலா அப்பட்டப் சூட்டுகின்றனர்?

சத்தியம் இன்றேல் தாரிமீகமில்லை.

# சித்தவைத்தியம் மீண்டும் அரியாசனம்ஏறவேண்டும்

''ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்'' என்று மகாகவிபாரதியாரும் கூறுகின்றார். பாரதி நூற்றாண்டு கொண்டாடும் இந்தச்சமயத்தில் அவர் நோய்களைப் பற்றியும் வைத்தியத்துறைபற்றியும் கூறியிருப்பதைச் சிந்திப்பதும் பொருத்தமுடையதாகும்.

'நோய்க்குமுக்கியகாரணம் ஜீவர்களின் மனதில்தோன்றும் பயம், கவலை, கோபம், ஸம்சமயம்,பொறுமை, வெறுப்பு, அதிருப்தி முதலிய விஷகுணங்களேயாகுமென்பதை நான் அங்கீகரிக்கிறேன். உள்ளத்திலே தோன்றும் அச்சம்முதலானவே நோய்களைப்பிறப்பிக்கின்றன. என்பதில்எனக்கு சந்தேகமில்லை. ஆனால் அங்ஙனம் பிறக்கும் நோய்களை நன்கு போஷணைசெய்துவளர்ப்பதும் அதினின்றும் மரணத்தின் வரவைமிகவும் எளிதாக்கித்தருவதுமாகிய தொழில்கள் பெரும்பாலும் வைத்தியர்களாலேயே செய்யப்படுகின்றன என்று தோன்றுகிறது ஆயிரம்பேரைக் கொன்றவன் அரைவைத்தியன் என்ற பழமொழி முற்றிலும் உண்மையெனவே நான் நினைக்கிறேன்.

கடமையாற்றுகிறார். மருந்துகள், மாத்துவபோதனை என்பனபற்றிய ஆராய்ச்சிகளுக்காக அவர் பட்டங்கள் பலவற்றைப்பெற்றிருக்கிறார். சமீபத்திலேஅவர் எழுதிவெளியிட்டுள்ள நூல் ஒன்று தற்கால வைத்திய உலகுக்கே பேரதிர்ச்சியாயும் சிந்தனையைத் தூண்டுவதாயும் அமைந்துள்ளது. இந்நூலின் பெயர்; Confissions of a Medical Hirotie அதாவது ''வைத்திய சாஸ்திரத்தில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட ஒருவனுடைய என்பதாகும். அந்நூலில் அவர் வெளியிட்டுள்ள முக்கியமான கருத்துக்கள் சிலவற்றை இங்கே தருகிறேன்.

ஃ வருடாந்த உடற்பரிசோதனை ஆரோக்கியத்திற்கு அபாயமானது.

ஃ நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரிகள் அபாயமானவை.

ஃ சத்திரசிகிச்சைகளால் ஏற்படும் நற்பலன்களை விடத் தீமைகளே அதிகமானவை.

ஃ வைத்திய பரிசோதனை ஆய்வு கூடங்கள் வெளியிடும் முடிவுகள் தாறுமாறானவை.

ஃமருந்துவகைகள் குணமாக்குவதற்குப் பதிலாகப் பிரச்னைகள் பலவற்றையும் உருவாக்குகின்றன.

ஃ வைத்தியரின் கையிலே எக்ஸ்–ரே கருவி அனர்த்தம் விளைகின்றது.

இங்ஙனமாக அவர் கூறியுள்ள கருத்துக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தற்கால வைத்திய முறைகளின் மர்மங்கள் பலவற்றை அவர் தமது நூலிலே அம்பலமாக்கியுள்ளார். அந்நூலை வாசித்தவர்கள் இப்போதுள்ள டாக்டர்களைச் சகலமும் அறிந்த வைத்திய நிபுணர்களாக ஏற்கத் தயங்குவர் என்பது திண்ணம்.

நல்ல வைத்தியருக்குரிய இலட்சணங்களைப்பற்றி மற்றுமொரு அமெரிக்க டாக்டர் கூறுவதையும் கவனிப்போம். ''நோயாளி ஒரு மனிதன்; ஆசைகள். ஆர்வங்கள்,விருப்பு வெறுப்புக்கள்' தாம் பத்திய சமூக வாழ்க்கையில் ஏற்படும் கருத்துவேறுபாடுகள், பொருளாதாரப் பிரச்னைகள் போன்ற பல சிக்கல்கள் அவனுக்கு உண்டு. இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து நோயின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து வைத்தியம் செய்பவனே சிறந்தவைத்தியன். அதைவிடுத்து மனித உடலைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்து அவ்வப்பாகத்தில் உள்ள நோயை மட்டும் குணப்படுத்த முயல்பவன் தனிமரத்தைப் பார்க்கிறானே அன்றிக் காடு முழுவதையும் முழுமையாகக் காண்கிறானில்லை. சத்துணவு, உடற்பயிற்சி, சுமுகமான தாம்பத்திய சமூக சூழல் போன்ற பல வழிமுறைகளையும் ஆராய்ந்து பார்த்துக் கடைசியாகவே சத்தி வாய்ந்தமருந்துகளையோ சத்திரசிகிச்சையையோ கையாளுபவனே சிறந்தவைத்தியன்.''

இங்கே தெய்வ புலமைத் திருவள்ளுவர் கூறுவதையும் நாம் கவனிக்க வேண்டும்.

''நோய் நாடி நோய் முதல்
நாடி அது தணிக்கும்
வாய் (வழி வகை) நாடி
வாய்ப்பச் செயல்''

என்கிறார்.

மனிதனுடைய உடலமைப்புப் பஞ்சபூதங்களாலா

[5ம் பக்கம் பார்க்க]

## கலாநிதி இரத்தினசபாபதி பாக்கியநாதன்

''இதினின்றும் வைத்திய சாஸ்திரம் பொய்யென்றுவது, வைத்தியர்கள் எல்லோருமே தமது சாஸ்திரத்தை நன்கு கற்றுணராத போலிவேஷதாரிகளென்றுவது, மனமறிந்த அயோக்கியர்கள் என்றுவது, வேண்டுமென்று மனிதனைக் கொல்லுகிறார்களென்றுவது நான் சொல்லவிரும்புவதாக யாரும் நினைத்துவிடலாகாது.

''வைத்திய சாஸ்திரத்தில் எத்தனையோ கண்கண்டபயன்கள் இருப்பதை நானறிவேன். வைத்தியர்களிலே பலர் தமது சாஸ்திரத்தில் உண்மையான உயர்ந்த தேர்ச்சியுடையோராகவும் ஜீவகாருண்யத்தில் சிறந்த மகான்களாகவும் இருப்பதை நானறிவேன். ஆனாலும் வியாதிகள் பல்குவதற்கும், மரணம் இங்ஙனம் மனிதரைப் பூச்சிகளிலுங் கடையாகவாரிக் கொண்டு போவதற்கும் உலகத்து வைத்தியர்கள் பெரும்பாலும் ஹேதுவாகிறார்களென்ற எனது கொள்கை தவறானதன்று.''

மேலே கூறிய அத்தனைகருத்துக்களையும் துணிந்து அன்றே வெளியிட்டவன் தீர்க்கதரிசியும் புரட்சிக்கவிஞனுமான மஹாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டுவிழா கொண்டாகும் இவ்வாண்டிலே நோய் வாய்ப்பட்டோரும் நோயைத் தீர்ப்போரும் இக்கருத்தை நினைவுகூருதல் சாலவும்பொருந்தும் என்றே நினைக்கிறேன்.

பாரதிகண்ட கனவுகள் நனவாகிவரும் இக்காலத்தில் அவன் கொண்டிருந்த புரட்சிகரமான கருத்துக்கள் பலவும் விஞ்ஞான ரீதியில் ஒப்புக்கொள்ளக்கூடியன என்பதை மேலைத்தேசஅறிஞர்கள்–குறிப்பாக அமெரிக்க அறிஞர்கள்–சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்தும் வருகிறார்கள்.

உதாரணத்துக்கு ஒன்று சொல்வேன்: அமெரிக்கவைத்திய நிபுணர்களில் ஒருவரான டாக்டர்றொபேர்ட் எஸ் மென்டெல்சோன் என்பவர் கால் நூற்றாண்டுக்காலமாக வைத்தியத்துறையில் மிகவும் ஈடுபாடுகொண்டு உழைத்துவருகிறார். அமெக்காவின் இலினோய் ராச்சியத்தின் வைத்தியக்குழுவுக்கு அவர் தலைவர். இலினோய் சர்வகலாசாலையிலே வைத்தியப்பகுதியில் நோய்த் தடுப்பு, சமூக ஆரோக்கியக் கூட்டுப் பேராசிரியராகக்

## தாயாகிக் காக்கின்ற சிவசக்தி

ஆதியே யருள்பொங்கு தேவியே
ஆனந்தச் சோலையே ஒளிவளர்
சோதியே தேனு ரமுதே
சேந்தன் தாயே சிவநாதன்
பாதியே மணிமொழிக் கோதையே
பார்வதி யன்னையே யான்பாட
நீதியே நீவருதல் முன்னே
நான்வா டாமலே யருள்வாய்

என்றுமென் னுள்ளத்தே நீங்காத
ஏகாந்தத் திருவினை பாதத்தை
முன்னமே பாலூட்டிப் பாடவைத்த
முலையினை யன்னையின் தோற்றத்தை
மின்னலிடை தாளமிட் டாடுகின்ற
மேலான திருநடனக் கோலத்தை
அன்னையே யடியேன் கண்டின்புற
அருள்வாய் வருவாய் முன்னே

விண்ணுகி அண்டத்துக் கோள்களாகி
வானுலவு கதிரவன் மதியுமாகி
கண்ணுகி கண்களில் தெரிகின்ற
காட்சிகள் பலவாகி வாழ்கின்ற
மண்ணுகி மண்ணிடைக் காற்றுகி
யாவீரர் திறனுகி மொழியுமாகி
பெண்ணுகி மாசற்ற மழலைமகிழ்
தாயாகிக் காக்கின்ற சிவசக்தி நீ

ஓமென்று உயிர்பாட இசைக்கின்ற
இராகங்கள் பலவாகி யதனோடு
தாமென்று இடையாட ஆதிசிவன்
தானுமாட மைந்தன்மேல் போராட
நானென்ற அகந்தையோட உன்புகழை
நான்பாட நீகேட்டுள்ள முருக
மீனென்ற உன்விழிகள் என்னைநோக்க
நான்காணும் உன்கோலம் இனிதே.

- கு. சடகோபன்

## "இலக்கியத்தில்

# புதுமையைவரவேற்கும்வேளை

## பழைமையையும் பேண வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"இலக்கியப் படைப்பில் புதுமையை வரவேற்கின்ற இன்றைய காலகட்டத்தில் பழமையையும் பேணி இலக்கியங்கள் படைக்கப்படல்வேண்டும் அப்போதுதான் மரபுவழி தவறாது நற்பண்புகளை அடிநாதமாகக் கொண்ட கதைகள் எம் இளம் சந்ததியினருக்குப் பயன்படக்கூடியதாக அமையும்"

இவ்வாறு யாழ் இலக்கிய வட்டச் செயலாளரும் பிரபல நாவலாசிரியருமான 'செங்கை ஆழியன்' யாழ். இலக்கிய வட்டத்தின் 28வது வெளியீடான 'சாவித்திரி சரிதம்' என்னும் காவிய நூல் அறிமுக விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'கலைப்பேரரசு' ஏ.ரி.பொன்னுத்துரை தலைமையில் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலாசார மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. ஆதீன முதல்வரின் ஆசியுடனும் பூசை வழிபாட்டுடனும் விழா ஆரம்பமானது.

செங்கை ஆழியான் தொடர்ந்து பேசுகையில், மக்களின் நல்வாழ்வு மலரவும் மங்கையரின் நற்பண்புகளை இளம் தலைமுறையினர் மனதில் பதிக்கவும் பழைய வரலாற்று நூலான சாவித்திரியின் சரிதம் காவிய ரசனையுடனும் மிகவும் சிறப்பான நடையில் படைக்கப்பட்டுள்ளது என்றும், புலவர் திரு. வே. கனகசபாபதி எழுதிய சாவித்திரி சரிதத்தை வெளியிடுவதால் யாழ் இலக்கியவட்டம் பெருமையடைகிறது என்றும் குறிப்பிட்டார்.

எழுத்தாளர் திரு. க. தி. சம்பந்தர், யாழ். இலக்கிய வட்டத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி நூலாசிரியரைக் கௌரவித்தார்.

முதற் பிரதியை சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தலைவர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் வாங்கினார்.

பண்டிதர் செ. சிவப்பிரகாசம் ஆய்வுரை நிகழ்த்துகையில், "காப்பியத்துக்குரிய எல்லா அம்சங்களும் இந்நூலில் அமைந்திருக்கின்றன. இந்த இருபதாம் நூற்றுண்டிலே எங்கள் மத்தியில் ஒரு கம்பன் தோன்றியிருக்கிறுரோ என்று இந்நூலைப்படிக்கும்போது தோன்றுகிறது இப்படியான ஒரு புலவனை நாம் பெற்றிருப்பது ஒருபெருமைக்குரியதாகும்" என்றார்

மேலும் யாழ். இலக்கிய வட்டச் சார்பில் புலவர் வே. கனகசபாபதிக்கு 'புலவர் மணி' என்னும் பட்டத்தை அளிக்கவேண்டுமென்ற முன்மொழியச் சைவ புலவர் அதிபர் க. கணபதிப்பிள்ளை வழிமொழிய சபையோரின் ஏகோபித்த ஆதரவுடன் 'புலவர் மணி' என்னும் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

சைவப்புலவர் அதிபர் கணபதிப்பிள்ளை பேசுகையில், 'தமிழ் கூறும் நல்லுலகம் உய்யும் வண்ணம் நளன் சரிதை, கண்ணகி சரிதை, அரிச்சந்திரன் சரிதை இன்னோரன்ன. அரும்பெரும் கதைகள் செய்யுள் வடிவில் வெளிவந்துள்ளன. ஆனால் இது காலவரை. சாவித்திரி சரிதம் செய்யுள் வடிவு பெருத குறையினை நிறைவுபெறச் செய்துள்ளார் புலவர் கனகசபாபதி. இச்செய்யுள்களை நாம் அவசியம். ஆராய்ந்துபார்த்தால் உண்மையில் வில்லிபுத்தூராரையும் கம்பரையும் நாம் காணமுடிகிறது' என்றார்.

அடுத்து ஆய்வுரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணிய ஐயர் பேசுகையில், 'பெண்ணின் கற்பின் பெருமையை எடுத்துக் கூறுகின்ற சாவித்திரி சரிதையை மரபுவழி இலக்கியப் படைப்பில் சிறப்பாக ஆக்கித்தந்திருக்கிறார் ஆசிரியர். காப்பியத்துக்குரிய அனைத்து இலட்சணங்களும் அமைய இலகுவானநளின நடையில் அமைந்திருக்கிற இக்காவியம் மக்கள் மத்தியில் பெருமதிப்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை' என்றார்.

தொழிலதிபர்கள் க. கனகராசா, இ. அரசரத்தினம் ஆகியோர் விசேட பிரதிகளைப் பெற்றனர். (அ)

## "கிராமப் பகுதியிலிருந்துதான்

# நாட்டின் அபிவிருத்தி உயர்த்தப்பட வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

'கிராமப்புறங்களின் வளங்கள் கடந்த பல காலமாக நகரப்புறங்களுக்கே கொண்டு செல்லப்பட்டன. இவை மீண்டும் கிராமப்புறங்களுக்குக் கொண்டுவரப்படவேண்டும். கிராமப்பகுதிகளிலிருந்துதான் நாட்டின் அபிவிருத்தி உயர்த்தப்படவேண்டும்.'

இவ்வாறு வடபிராந்திய சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு புங்குடுதீவிலுள்ள சர்வோதய பிராந்திய தலைமைச் செயலகத்தில் நடந்த சனசமூகநிலையங்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் திரு. திருநாவுக்கரசு மேலும் பேசுகையில், நாட்டின் நலனுக்கும் கிராமங்களின் நலனுக்கும் இயக்கரீதியாகவும், தனியாகவும் செயற்பட்டுவரும் சமூகசேவையாளர்களை நாம் ஊக்குவிக்கவும், அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து உற்சாகப்படுத்தவும் முன்வரவேண்டும்,

பல சமூக சேவை இயக்கங்களில் போட்டிகள் மூலம் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவதால் உண்மையான சமூக சேவையாளர்கள் பொதுஸ்தாபனங்களில் இடம் பெறுமலும் விடுகின்றனர். சில சமூகசேவையாளர்கள் போட்டிகளைக் கண்டு ஒதுங்கி தனிமனிதராகவும் தனித்து நின்று சேவையாற்றுகின்றனர்

இந்தவிதமாக தனிமனித இயக்கமாக சமூகசேவையில் ஈடுபடும் சேவையாளர்களின் சக்தியையும் நாட்டின் நலனுக்குப் பயன்படுத்த சர்வோதய இயக்கம் வழிவகுத்துள்ளது.

எனவே உண்மையான சேவையாளர்களை, சேவை நலன் விரும்பிகளை ஆர்வமுடன் செயற்படுபவர்களை மக்கள் தொண்டர்களாகக் கணித்து அவர்களது அனுபவம் ஆற்றல்களையும் நாட்டு நலன்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

கிராம நலனில் அக்கறையுள்ளவர்களுக்கு முன்னுரிமையும் மதிப்பும் கொடுப்பதன் மூலமே நாம் உண்மையான சமூகசேவைகளைச்செய்யமுடியும். இந்தவகையில் சமூக சேவையாளர்களை ஒன்றிணைப்பதன் மூலம்தான் நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியும்.


## ஓர் நற்செய்தி

யாழ். குடாநாட்டில் எப்பகுதியிலாவது

1. வீடுகள்
2. காணிகள் (Buildable Lands)
3. தோட்டங்கள்
4. கட்டிடங்கள் (Buildings)

விற்பனவுக்கிருந்தால் உடனடியாக எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

விபரங்களுக்கு!

திட்ட அதிகாரி,
தோட்டக் காணிப்பிரிவு,
த பினென்ஸ் கம்பனி லிமிட்.
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்  போன்: 23680

TFC


# சித்தவைத்தியம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னது பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற இந்த பஞ்சபூதங்களிலே ஆகாசம் செயலற்றது ஏனைய நான்கும் தத்தமக்குரிய செயல்களைப் புரிந்து வருகின்றன. நமது சரீர அமைப்பிலே பிருதுவி தத்துவம் அதாவது மண்ணின் தன்மை அதிகரித்தால் உடல் தடித்துப் போகிறது. குறைந்தால் மெலிவும் தளர்ச்சியும் ஏற்படுகின்றன. அப்புதத்துவம் அதாவது நீரின் தன்மை அதிகரித்தால் சளியைச்கிளப்புகிறது; குறைந்தால் வரட்சியை உண்டுபண்ணுகிறது. தேயுதத்துவம் அதாவது உஷ்ணத்தன்மை மிகைப்பட்டால் காய்ச்சல்; குறைந்தால் சீதம், இங்ஙனமாக வாயுத்தத்துவம் அதாவது காற்றின்தன்மை முறையாக அமையாவிட்டால் பலவிதமான சிக்கல்களை ஏற்படுத்திவிடுகின்றது. இவற்றையெல்லாம் உற்றுநோக்கும்போது ஆரோக்கியமான உடலமைப்பு அரிதினும் அரிதாகவே யாரோ சிலருக்கு வாய்க்கிறது. பெரும்பான்மையாரும் பலவிதமான நோய்களுக்கே யாண்டும் ஆளாகிவருகின்றனர் நமது உடம்பு நமக்குக் கிடைத்த ஒரு வாடகைவீடு, வாடகை கொடுக்காமல்இருக்க முடியுமா? ஒன்றன் பின் ஒன்ருக நமக்குண்டாகும் நோய்கள் தான் நாம் கொடுக்கும் வாடகைப்பணம்'

உடலுக்கேற்படும் நோய்களைச் சகித்துப் பழகுவதும் ஒரு வகையில் ஆத்மசாதனையே யாகும். அவற்றைச் சகித்திருக்கும் வரை உள்ளம் உறுதி பெறுகிறது; நோயின் வேகமும் குறைகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆத்மசாதகனும் அருள் நாட்டத்தில் உள்ளவனுமான ஒருவனை நோய்கள் தீண்டமாட்டா.

பழம் கதையாய்க் கனவாய் மெல்ல மெல்ல மறைந்துவரும் சித்தவைத்திய முறையை மீண்டும் அரியாசனம் ஏற்றுவது நமது கடமை. மேனாட்டு வைத்திய சாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்தவர்களே இந்த முயற்சியில் துணிந்து ஈடுபட வேண்டும். ஆராய்ச்சி மனப்பான்மையும் விஞ்ஞான அணுகுமுறைகளையும் நன்கு பயின்றஅவர்களே நமது சித்த வைத்தியத்தில் உள்ள மூலிகைகளின் குணவிசேஷங்களையும் காயகல்ப சிகிச்சை முறைகளையும் ஆராய்ந்து அவற்றின் மகத்துவத்தை உலகறியச் செய்யும் ஆற்றல் உள்ளவர்களாவர். காய்தல் உவத்தல் இன்றிச் சித்தவைத்தியத்துறையிலும் அவர்கள் ஈடுபட்டுழைக்க முன்வரவேண்டும். நமது பரம்பரையான வைத்தியர்களும் இந்த முயற்சிக்குத் தாராளமாகக் கைகொடுத்து உதவத் தயங்காமல் முன்வர வேண்டும். தத்தமக்குத் தெரிந்த நல்ல கைகண்ட மருந்துவகைகளையும் தைல வகைகளையும் அவற்றைத் தயாரிக்கும் பாரம்பரியமுறைகளையும் நமது முந்திய தலைமுறையினரைப் போலத் தமக்குத் தமக்கெனவே வைத்துக் கொள்ளாமல் மனித சமுதாயத்துக்கே உரிமையாக்க முன்வர வேண்டும்

இந்த ஒரு விஷயத்திலாவது நாம் பாரதியாருடைய ஏக தேசமான கூற்றை மறுத்துரைக்க வழிகாண்போமாக.

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியதுவாமே."

— திருமூலர்

## ஜனதிபதி தேர்தல்:

# சிதம்பரநாதன் ஆருடம் பலித்தது!

[யாழ்ப்பாணம்)

ஜனதிபதி தேர்தலில் திரு. ஜே, ஆர். ஜெயவர்த்தன வெற்றிபெறுவார் என்று எண் சோதிட நிபுணர் திரு எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் கூறிய ஆருடம் பலித்திருக்கிறது.

இத்தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவே வெற்றிபெறுவார் என்று திரு. சிதம்பரநாதன் முன்கூட்டியே 'ஈழநாடு'வுக்கு அறிவித்திருந்ததுடன் இவர் தமது ஆகஸ்ட் மாத சோதிட இதழிலும் ஆருடம் கூறியிருந்தார்.

ஜனதிபதி தேர்தலில் திரு. ஜெயவர்த்தன அமோக வெற்றி பெறுவார் என்று கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குக் கடிதம் எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

[கரவெட்டி]

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை நெல்லியடி உப அலுவலகப் பகுதியிலுள்ள மின் விளக்குகளில் எரியாத நிலையில் கிடந்த மின் குமிழ்கள் அகற்றப்பட்டு புதிய மின் குமிழ்கள் போடப்பட்டுள்ளன.

# நாளை நடைபெறும் வாணி விழா

[யாழ்ப்பாணம்]

நாளை ஞாயிற்றுகிழமை மாலை கோண்டாவில் கிழக்கு புதிய கல்வி நிலையத்தில் நவராத்திரிவிழா கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழா திரு. ப. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இரவு பட்டிமன்றம், இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறவுள்ளது. [க]

# கடனுதவி

(மன்னர்)

மன்னர்- பாலம்பிட்டி கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு தலா 400 ரூபா வீதம் மொத்தம் 4 ஆயிரம் ரூபா கடனுதவி ஆடுவளர்ப்புக்கு வழங்கப்படும்.

இக்கடனுதவி உலக கரிசன இயக்கத்தினல் வழங்கப்படுமென கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கணேசமூர்த்தி தெரிவித்தார்.


எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு
விசேட கழிவுடன்

★ சொனி (Sony)
★ நாஸனல் (National)
★ சன்யோ (Sanyo)
★ சீரு டெலிவிஷன்களை

பெற்றுக்கொள்ளவும்.

சென்னை ரூபவாகினி ஏரியல்
உத்தரவாதத்துடன் பொருத்திக்கொள்ளவும்.
மற்றும்
உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை
வீடியோவில்
படம் பிடித்துக்கொள்ளவும்.

வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்,
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்,
யாழ்ப்பாணம்.

# "சிக்கன சேமிப்பு முறை பணியாளர்க்கு வரப்பிரசாதம்"

[நீர்வேலி]

"கூட்டுறவுப் பணியாளர் சிக்கன சேமிப்பு கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும் வடபகுதியில் முதன்முதலில் இச்சங்கத்தை ஆரம்பித்த பெருமை வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்க பணியாளர்களுக்கே உரியதாகும்"

இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்திஉத்தியோகத்தர் திரு. சி. தணிகாசலம் வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்க பணியாளர் சிக்கன சேமிப்பு கூட்டுறவுச்சங்கத்தின்பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் "இச் சங்கம் அங்கத்தவர்களின் குடும்பநன்மைகருதி இயங்கி வருகிறது. இது ஏனையசங்கங்களுக்கு ஓர் முன்னேடியாகவும் திகழ்கிறது. என்றும் கூறினர்.

சங்கத்தலைவர் திரு. ந. குமரேசபசுபதி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சங்க உபதலைவர் திரு.ச செல்வரத்தினம் திரு ச. பாலசிங்கம், திரு. மு. சங்கரப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினர். [வெ]

## மகாகாளி அம்மாள் கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

வண். மேற்கு ஐயனர் கோவிலடி மங்களமகாகாளி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் அடுத்தமாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. கிரியைகள் எதிர்வரும் 29ம் திகதிவெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

அடுத்தமாதம் 2–ம் திகதி செவ்வாக்கிழமை மண்டாபிஷேகம் ஆரம்பமாகும். (அ)

# "பனம் தொழிலை நவீனமயப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டும்"

## பனம் பொருள் அபிவிருத்தி நிபுணர் கூறுகிருர்

புலோலி]

"பனம் தொழிலை நவீனமயப்படுத்தி அதன்மூலம் புதிய உற்பத்தியாளர்களை உருவாக்குவதற்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் முன்வர வேண்டும். பனைத் தொழிலை மூலதனமாகக் கொண்டுள்ள சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியமாகும். பனைத் தொழிலில் வல்லுனர்களுக்குப் பனைகள் சொந்தமாக்கக் கூடியமுறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அரசாங்கத்தை கோரவேண்டும்."

இவ்வாறு தமிழ்நாடு அரசு சந்தைப்படுத்தும் கூட்டுறவுச் சம்மேள விசேட ஆலோசகரும் பனம்பொருள் அபிவிருத்தி நிபுணருமான திரு. கே. சம்பந்தம் பனம்பொருள் சம்பந்தமான செய்முறைப்பயிற்சிக் கருத்தரங்கில் பேசுகையில் கூறினர்.

இக் கருத்தரங்கு அச்சுவேலி தெற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க தலைமை காரியாலயத்தில் வலிகாமம் கிழக்கு தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்க தலைவர் திரு எஸ். தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. கே. சம்பந்தம் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது பதநீர் உற்பத்தியைப் பெருக்குவதுடன் பதநீர் விற்பனையையும் அபிவிருத்திசெய்ய வேண்டும். இதற்காகச் இச் சங்கங்கள் ஊழியர்களை நியமித்து வீடுகள்தோறும் பதநீரின் சிறப்புக்கள் பற்றியும் அவற்றை பயன்படுத்தவேண்டிவ அவசியம் பற்றியும் பிரசாரம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அவசியம், தமிழகத்தில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் அவற்றை நிவர்த்தி செய்து இன்று வருடந்தோறும் பத்தாயிரம் லீற்றர் பதநீரை இந்தியா முழுவதிலும் விற்பனை செய்யக்கூடியதாக இருக்கிறது.

இதேபோன்று யாழ். மாவட்டத்திலும் பதநீர் விற்பனையை ஆரம்பித்து செயற்படுத்த வேண்டும். அடுத்த வருடங்களில் இங்கிருந்து கொழும்பிற்கும் பதநீர் அனுப்பிவைக்கப்பட்டு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இங்குள்ள பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் சீவுவதற்குப் பயன்படுத்தும்பனைகளை விடக் கூடுதலான பனைகளைப் பதநீர் உற்பத்திக்என அரசாங்கமே வழங்கியுள்ளது. தமிழகம் போன்று இந் நாட்டிலும் பனைத்தொழில் வல்லுனர்களுக்கும் பனைகள் சொந்தமாகக் கூடியமுறையில் நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரவேண்டும். பனஞ்சீனி உற்பத்தியினால் நட்டம் ஏற்படும் என்று இக் கூட்டுறவுச்சங்கம் அச்சம் அடையத் தேவையில்லை. ஏனெனில் பனஞ்சீனியை அடிப்படையாகக் கொண்டு பனம் கோலா, பனம் ரொபி போன்ற பல்வேறு உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதால் ஒரு கிலோ பனஞ்சீனியின்விலை பதினைந்து ரூபாவாக இருந்தாலும் நட்டம் ஏற்படும் என்றும் பயப்படத் தேன்வயில்லை.

பனம்பொருள் அபிவிருத்தி சபை பனம்பொருள் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டும். விளம்பரங்களைச் செய்தும் உதவவேண்டும். பனம் கற்கண்டு உற்பத்தி யாழ். மாவட்டத்தில் தற்போது பாரம்பரிய முறையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனை நவீன முறைப்படுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்ருர்.

பனம்பொருள் அபிவிருத்தி சபை தலைவர் திரு. க. நடராசாவும் உரையாற்றினர். (வெ)


# கப்பலில் வானொலி அதிகாரிகளாகும் பயிற்சிநெறி

## Ships Radio Officers Course

மரிரைம் வானொலித்தொடர்புச் சான்றிதழ்

## 1983 பரீட்சைக்குத் தயாரித்தல்

**பயிற்சி முறை:** (GENERAL CERTIFICATE) 12 மாதங்கள்
(SPECIAL CERTIFICATE) 6 மாதங்கள்

**தொடக்கம்:** 1-11-1982 – ஒழுங்குமுறை, நடவடிக்கைமுறை, தொழினுட்ப முறை ஆகிய துறைகளில் முறையான பயிற்சியளிக்கப்படும்.

**விரிவுரையாளர்:** இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற எந்திரிமார் (ENGINEERS)கப்பலில் கடமையாற்றிய வானொலி இயக்க அதிகாரிகள், தொலைத் தொடர்புச் சாதன விற்பன்னர் முதலானேர்.

**பயிற்சிக்கட்டணம்:** (GENERAL) ரூபா 12,000/-
(SPECIAL) ரூபா 6,000/-
(தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம்)

**கல்வித்தகைமைகள்:** (GENERAL) G C. E. (A. L) PHYSICS MATHS க.பொ.த. (உயர்தரம்) கணிதம், பௌதிகம் சித்தி. (SPECIAL) G. C E. (O. L) CREDIT IN PHYSICS MATHS. க. பொ. த. சாதாரணம் கணிதம்/பௌதிகம்/விஞ்ஞானம் திறமைச்சித்தி.

கப்பலில் வானொலி இயக்கப்பயிற்சி பெற்றவர்களுக்குத் தொடக்கநிலைச் சம்பளம் 1200 அமெரிக்க டலர் முதல் படிப்படியாக முன்னேறும் வேலை வாய்ப்புப் பெறலாம்.

தொடர்பு கொள்ளவேண்டியது:

## குளோபல் கொம்யூனிகேஷன்ஸ் லிமிற்றெட்,

## GLOBAL COMMUNICATIONS LTD.

170, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்பு 11

**கிளை:** 127, கே. கே. எஸ். வீதி,
யாழ். கூட்டுறவுப் பன்முகப் பணிமனைக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.


அடுத்த ஆண்டிலிருந்து

# நெடுந்தீவும.வித்தியாலயத்தில் க. பொ. த. உயர் வகுப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் திரு. சிவ.சங்கரப்பிள்ளையும் நெடுந்தீவு முன்னேற்றக் கழகத் தலைவர்களும் மேற்கொண்ட ஆலோசனைகளை அடுத்து திரு. சிவ.சங்கரப்பிள்ளை யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு எஸ். சிமியாம்பிள்ளை புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. குகதாசன் ஆகியோரைச் சந்தித்து நெடுந்தீவின் கல்வித்தரத்தை விருத்தி செய்வது தொடர்பான மகஜரைக் கையளித்துப் பேச்சுவார்த்தை நடத்திஞர். இதன்படி அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

இங்குள்ள ஆசிரியர்கள் பற்ருக்குறையை நீக்கும் பொருட்டு பல வருடங்களாகத் தொடர்ந்து ஒரு பாடசாலையில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களுக்கான உள்ளூர் இடமாற்றம் ஒன்றை நடைமுறைப் படுத்துவது குறித்தும் மகாவித்தியாலயத்திற்குத் தேவையான விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் பாடசாலைக்கான தளபாடங்கள் பற்ருக்குறையை உடன் நீக்குவது குறித்தும் கல்வி அதிகாரிகள் இப் பகுதிக்குத் திடீர் விஜயங்களை மேற்கொண்டு பாடசாலைகளின் நிலைமைகளைக் கண்காணிப்பதும் தொடர்பாகவும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும் மற்றும் அதிகாரிகளும் முதல் தடவையாக நெடுந்தீவுக்கு வருகைதந்து இங்குள்ள பாடசாலைகளைப் பார்வையிடுவார்கள் எனத் தெரிகின்றது. (அ)

## நூல்நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் சைவசித்தாந்த நூல்நிலையத்திறப்பு விழாவும், சோதிட வித்தகர் வே. சுவாமிநாதன், புலவர் மணி வே. கனகசபாபதி ஆகியோருக்கான பாராட்டு விழாவும் இன்று நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் இடம் பெறவுள்ள இவ் வைபவங்களுக்கு: சங்கத்தலைவர் திரு ம. பொ. செல்வரத்தினம் தலைமை தாங்குவார் தொழிலதிபர் திரு. க. கனகராசா நூல் நிலையத்தை திறந்து வைப்பார்.

அதிபர் வை. மகேஸ்சன் ஆசிரியரையும், புலவர் க.சி. குலரத்தினம், பண்டிதர் சி. வேற்பிள்ளை, சைவப்புலவர் நா. கணபதிப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரைகளையும் வழங்குவார்கள்.

## வாணிவிழா

[யாழ்ப்பாணம்]

பன்ஞலை கணேச சனசமூக நிலையத்தின் வாணி விழா நிலையத்தலைவர் திரு. இ. கதிர்காமத்தம்பி தலைமையில் நாளைமாலை நிலையதிறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகள், பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. ( )

# தமிழக அணியினர் முன்னணியில்

புதுடில்லி, அக். 22 புதுடில்லியில் நடைபெறும் 8-வது தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளில், தமிழக அணியினர் நான்கு பிரிவுகளிலும் முன்னணியில் நிற்கின்றனர்.

நீச்சல் தடாகத்தில் இன்று நடைபெற்ற நீச்சல் போட்டியில், தமிழக நீச்சல் வீராங்கனைகளே முதல் மூன்று இடங்களையும் பெற்று சாதனை நிலைநாட்டினர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் மொத்தம் ஐந்து தங்கப் பதக்கங்கள்வழங்கப்படுகிறது. இவற்றில் நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ள ''மகாராஷ்டிரத்''தைச் சேர்ந்த 17 வயதுடைய செல்வி கரென்டி நேற்று பாரதத்தின் தேசிய சாம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். (உ)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கிராமோதயசபைகளுக்கு உதவி

[யாழ்ப்பாணம்]

''பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஒருபகுதியை கிராமோதயசபைகள் ஊடாக கிராமசிறுவேலைகளுக்கு நிதி ஒதுக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன இதைவிட கிராமோதய நிதியமொன்றையும் பிரதமர் ஆரம்பித்துள்ளார். இதன் மூலம் கிடைக்கும் நிதி நேரடியாக கிராமோதயசபைகளுக்கு வழங்கப்படவுள்ளன'' இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக் வேலணை சரஸ்வதிவித்தியாசாலை மண்டபத்தில தீவுப்பகுதி தெற்கு கிராமோதய சபை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ.சி நாகராசா தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் இ பிரிவு பிரதேசசபைத்தலைவர் திரு. நா. சிவராசசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு பி. எல். பற்றிக் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கிராமோதய சபைகள் உள்ளூராட்சி மன்றங்களில் ஈடுபாடுகொள்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன. அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டாலும் நிதி பகிர்ந்தளிப்பதில் சிக்கல்கள் தோன்றத்தான் செய்யும். இவை காலகட்டத்தில் நடைமுறைகள் மூலம் தெளிவாகிவிடும்.

அரசுக்கு அபிவிருத்திசபைகளுக்கு எப்படி அதிகாரங்களை பங்கீடுசெய்வதில் தாமதம் ஏற்படுகிறதோ இதேபோல பன்முகபபடுத்தப்பட்ட நிதியிலும் கிராமோதயசபைகளுக்கு நிதி பங்கீடு செய்வதில் சிரமங்கள் இருக்கத்தான் செய்யும்.

கிராமோதயசபைகளும் மக்களின் பிரதிநிதித்துவம் உடையது பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் பிரதிநிதிகள் இதனால் கிராமங்களின் தேவைகளுக்கு நிதி ஒதுக்குவதில்சிரமங்கள் இருக்க முடியாது'' என்றார்.

[வண். நி]



(யாழ்ப்பாணம்)

நீராவியடி கிருஷ்ணன் கலை மன்றம் அளிக்கும் ''இலங்கை வேந்தன்'' இசை, நடன, நாடகம் இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இலங்கை திரைப்பட, வானொலி புகழ் கலைஞர்கள் பங்குபற்றும் இந்த நாடகத்துக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பிரதம விருந்தினராகவும், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
போடியார்- அடி பிள்ளை
பாரதிராஜா, பாலசந்தர் படங்கள் எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சுபோட்டார் பாக்கியராஜ்.
தங்கம்மா- அம்மான் அதில் முக்கியம் என்ன தெரியுமா சுட்டிப்பயல் நடிப்பு ஏ ஒன்.
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்‌ஷன் பாக்கியராஜ்

## தேவாரப் போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை கலைமகள் விழாவை முன்னிட்டு வழமை போல இவ்வருடமும் காரை நகர் மக்களிடையே தேவார, இசை, நடனப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகள் இம்மாதம் 30-ம் திகதி சனிக்கிழமையும், பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது

மனோகரா [யாழ் நகர்]
தினசரி 4 காட்சிகள்
21-25வரை
நாகேஸ்வரராவ்-பானுமதி
கானல் நீர்

## கடுகதி பஸ்சேவை

(மன்னார்)

மன்னாரிலிருந்து சங்குப்பிட்டிக்கு நேரடியாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த கடுகதி பஸ் தற்போது விடத்தல் தீவு ஊடாக சங்குப்பிட்டி வரை சேவையிலீடு படுத்தப் பட்டு வருகிறது.

## இரண்டாவது மாதிரிக் கிராமம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள இரண்டாவது மாதிரிக் கிராமத்தை நறுவிலிக்குளம் பகுதியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இம்மாதிரிக் கிராமத்தில் 60 வீடுகள், ப. நோ. கூ. சங்கக்கிளை, சனசமூக நிலையம், பாடசாலை, தேவாலயம் என்பன நிறுவப்படும்.

இதற்கு முன்னோடியாக மாதிரிக் கிராமம் அமையவுள்ள பகுதிக்குச் செல்வதற்கான வீதிகளும், கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

24-10-82வரை மட்டும்
ராணி (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-லக்ஷ்மி-முத்துராமன்-சிவகுமார்
ராஜராஜசோழன் (கலர் சினிமாஸ்கோப்
25-10-82 முதல் பெண் தெய்வம்

சில தினங்கள் மட்டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
ராஜபார்வை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனா
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா
பாடசாலை மாணவர்க்கு விசேட ஒழுங்குசெய்து தரப்படும்

வின்ஸர் குறிப்பிட்ட சிலதினங்கள்மட்டும்
(யாழ். நகர்) 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

ரீகல் [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30
6-30, 9-30
ரஜனிகாந்த்-ரதி
முரட்டுக்காளை
[கலர்]

சாந்தி [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஷா நவாஸ் - சுமதி
பாதைமாறிய பருவங்கள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
Daily 10-30, 2-15, 6-00, 9-30.
A BRIDGE TOO FAR
(War Film)
25-10-82 முதல் நெஞ்சில் ஓர் ஆலயம்

## மரம்நாட்டு வைபவம்

[மன்னார்]

உலக உணவு தினத்தை முன்னிட்டு பேசாலை பத்திமா மகாவித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் திரு. எக்ஸ். எப். பங்கிராஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மரம் நாட்டுவைபவம் நடைபெற்றது

இத்துடன் பேசாலை பத்திமா மகாவித்தியாலய இளம் விவசாயிகள் கழகத்தைச்சேர்ந்த மாணவர்கள் வீடுவீடாகச்சென்று பல நூற்றுக்கணக்கான மரங்களை நாட்டினர்.

## சர்வோதய...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதிதான் குறித்த திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

''அரசாங்கம் ஒரு லட்சம் ரூபா திட்டத்தில் செய்யும் வேலைத்திட்டத்தை சர்வோதய இயக்கம் இருத்தையாயிரம் ரூபா செலவில் செய்துமுடிக்கும். இதனால் தான் உலகநாடுகளில் உள்ள ஸ்தாபனங்கள் சர்வோதய இயக்கம் போன்ற உண்மையான சமூகசேவை இயக்கங்களுக்கு நிதிஉதவி செய்கின்றன'' என்றார். [வண, நிரு]

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 6-ம் திகதி
சனிக்கிழமை
(23—10—82)

மேடம்: எதிர்பாராதமுடிவுகள் ஏமாற்றத்தைத் தரலாம். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். பழைய நினைவுகள் வேதனையைத் தரலாம்.

இடபம்: களஸ்திரவழியால் நன்மைகள் வந்து சேரும். குடும்பத்தில் தென்றல்வீசும். கவர்ச்சிகரமாக நாளை ரசிப்பீர்கள்.

மிதுனம்: எண்ணியதில் தடைகள் தோன்றும். நண்பர்களே காலைவாரி விடுவார்கள். துன்பத்தின் ரேகைகளும் படரும்.

கடகம்: தேஞன சம்பவங்கள் இடம் பெறும் தேடியது கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் கனகுசியான தினமாகும் இன்று.

சிங்கம்: செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும். பெரியோர்களும் ஆசிகூறுவார்கள். வெளியிடத்துத் தொடர்புகளும் பெருகும்.

கன்னி: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முனைந்து நிற்பீர்கள். முயற்சியால் முன்னேற்றமும் உண்டு.

துலாம்: களஸ்திரவழியால் நன்மைகள் வந்து சேரும். காதலர்கள் வாழ்க்கையில் இணைப்புக்கள் இறுகும்.

விருச்சிகம்: மாணவர்கள் வாழ்க்கையில்மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றமும் உண்டாம்.

தனு: தங்கள் திறமைக்கு மற்றவர்கள் நன்மதிப்பைக் கொடுப்பார்கள். பூமியால் இலாபமும் உண்டாம்.

மகரம்; அரச பயத்துக்கும் இடமுண்டாம். ஆத்திரப்படுவதன் மூலம் ஆபத்தைத் தேடிக்கொள்வீர்கள்,

கும்பம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனையக்கூடும்.

மீனம்: நீண்டநாள் கனவு இன்று நினைவாகும். அரசாங்க ஊழியருக்கு இன்று சிறப்பான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(மன்னார்)

மன்னார்- ஆண்டான்குளம் றெக்கற் விளையாட்டுக் கழகத்தினால் அமரர் அருமை சந்தியோகு ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கானகரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்த மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி மன்னார் மாவட்ட ரீதியில் நடைபெறும்.

## நெடுந்தீவு ச.ச. நிலையத்திற்கு நிதிஒதுக்கீடு

[நெடுந்தீவு]

நெடுந்தீவ கிழக்கு மாலித்துறை சனசமூக நிலையத்திற்கென நெடுந்தீவு கிழக்குக் கிராமோதயசபைத் தலைவர் திரு. என். இராமச்சந்திரன் 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். நெடுந்தீவு பிரதேச சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு மேற்படி சனசமூக நிலையப் புனரமைப்புக்கென இத்தொகையை ஒதுக்க அவர் நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

# 60 முதல் 82 வரை யாழ். மாவட்ட வாக்களிப்பு

| வருடம் | அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | ஐ. தே. க | சுதந்திரக் கட்சி | ல. ச. ச. க | கம்யூ. கட்சி | தமிழர் விடுதலை கூட்டணி | தமிழ் காங்கிரஸ் தமிழரசுகட்சி |
|---|---|---|---|---|---|---|---|
| 1960 | 1,81,749 | ——— | ——— | 8,715<br>4 80% | 8,651<br>4 76% | ——— | 1,56,401<br>86.05% |
| 1965 | 2,43,760 | ——— | ——— | 19,128<br>7.85% | 4,699<br>1.93% | ——— | 2 02,816<br>83.20% |
| 1970 | 2,88,484 | ——— | 713<br>0.25% | 2,599<br>.90% | 9,313<br>3.23% | ——— | 2,43,030<br>84 24% |
| 1977 | 3,32,886 | 8,637<br>2 59% | 5,048<br>1.52% | 3,487<br>1.00% | ——— | 2,39,070<br>71.81% | தமிழ் காங்கிரஸும் ஏனையவர்களும்<br>75,2 1<br>22.61% |
| ஜனாதிபதி தேர்தல் 1982 | 2,18,003 | 47,780<br>20.54% | 77,300<br>35.46% | 3,376<br>1.55% | ——— | ——— | தமிழ்காங்கிரஸ் பெற்ற வாக்கு<br>87,263<br>40 03% |

## தமிழ்ஈழ

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் ஈழத்திற்கு வெளியே தமிழ் ஈழ இலட்சியத்தில் பற்றுள்ளவர்கள் வாழ்கின்றார்கள் என்பதை மெய்ப்பிக்கும் விதத்தில், மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில், சிங்கள மக்கள் மத்தியில் வாழ்கின்ற போதிலும் தமிழினத்திற்கே உரித்தான அஞ்சா நெஞ்சத்துடன் துணிவுடன் தமிழ் ஈழ இலட்சியத்திற்கு வாக்களித்த மக்களுக்கு எனது நன்றியை விசேடமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஐந்து சிங்கள வேட்பாளர்களைத் துணிந்து எதிர்த்து நின்ற என்மீது கொண்ட பொறுமையாலும், தனிப்பட்ட குரோதத்தாலும் தங்களது பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் காரணமாகவும் எனக்கு எதிராகச் செயற்பட்டவர்களைத் தமிழினம் நன்கு இனம்கண்டுவிட்டது என்பதே எனது நம்பிக்கையாகும். தமிழ் ஈழ லட்சியத்தின் வெற்றிக்காக மக்களின் ஆதரவினைத் திரட்டுவதற்காக, தங்களது அயராத உழைப்பைத் தந்த இளைஞர்களுக்கும், பெரியோர்களுக்கும் எனது நன்றியை விசேடமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதுபோல் அவர்கள் தொடர்ந்தும் தங்கள் ஒத்துழைப்பை தமிழ் ஈழ இலட்சிய வெற்றிக்காக எனக்குத் தந்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். [மா]

## வடக்கு---

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைகளை சுதந்திரக்கட்சியினால் மட்டுமே தீர்க்கமுடியுமென்பது அசைக்க முடியாத நம்பிக்கை என்பதை யாழ். மாவட்டத்தில் சுதந்திரக்கட்சிக்குக் கிடைத்த சுமார் எழுபத்தேழு ஆயிரம் வாக்குகள் எடுத்துக்காட்டுகின்றன'' என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (மா)

## ஈழக்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லி மகாநாட்டில் தாமு கலந்து கொள்ளும் போது இவ்விஷயங்களுக்கு இறுதித்தீர்வை எடுப்பேன் என்றும் உறுதி தெரிவித்தார்.

## ஐ தே. க-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குகள் கிடைத்தது. இத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் மொத்தம் 23,302 வாக்குகள் ஐ. தே. கட்சிக்கு கிடைத்தது. ஜனாதிபதி தேர்தலில் யாழ். தேர்தல் தொகுதியில் 6,490 வாக்குகள் ஐ தே. கட்சிக்கு கிடைத்திருக்கிறது. யாழ் மாவட்டத்தில் 47,780 வாக்குகள் கிடைத்திருக்கிறது. இதனைக் கவனிக்கும் போது, யாழ்ப்பாணத்தில் ஐ. தே. கட்சிக்கு ஆதரவு அதிகரித்து வருவதையே காணக் கூடியதாகவிருக்கிறது. ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு யாழ். மக்கள் அளித்திருக்கும் ஆதரவுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்'' என்று தமது அறிக்கையில் திரு ஆர். ஆர். நல்லையா தெரிவித்துள்ளார்.


## மரண அறிவித்தல்
## திருமதி இரத்தினம்மா இரத்தினசபாபதி

இரத்தினம்மா இரத்தினசபாபதி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சம்பந்தர் இரத்தினசபாபதியின் (Retd Tele Communications Engineer) அன்புமனைவியும் நாகராசா (Auditor Generals Dept Employees Trust Fund Board) நாகரத்தினம் (தேவகி) (Staff Trinity College. Kandy), நாகேஸ்வரி (ருக்கு) இளைப்பாறிய ஆசிரியை, வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பேராசிரியர் மகாலிங்கம் (பேராதனை பல்கலைக்கழகம்), சாந்திமதி திருநெல்வேலி, ஜெகநாதன் (Organiser, Insurance Corporation) ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீரங்கன், கார்த்திகா ஆகியோரின் பேத்தியும், ஆவர். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக யாழ்ப்பாணம் விக்டோரியா வீதி, 59ம் இலக்க இல்லத்திலிருந்து இன்று (23-10-82) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 4924


## வி, என்.
## நாடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளுக்கு சென்றிருந்த சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நாடுதிரும்பியுள்ளார்.

திரு. நவரத்தினம் அமெரிக்கா, ஜெர்மன், லண்டன், கனடா, இந்தியா ஆகிய நாடுகளுக்குச் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். (மா)

## தவறான செய்தி

(யாழ்ப்பாணம்)

''ஈழநாடு'' பத்திரிகை (22-9-82) ல் ''சட்ட விரோதமான மின்சக்தி'' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் சட்டவிரோதமாக மின்சக்தி பெற்று வந்தாரென்று கொக்குவில் சந்தியில் ஒருகடையின் உரிமையாளரான திரு. எஸ். ரி. குமாரசாமி என்பவருக்கு 1,600 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுசம்பந்தமாக விசாரித்த பொழுது மேற்குறிப்பிட்ட திரு. குமாரசாமி என்பவருக்கும் அச்செய்திக்கும் எதுவித தொடர்பில்லை என்பதும் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்ட வில்லை என்பதும் தெரியவந்தது. இத்தவறுக்காக வருந்துகின்றோம். (ஆ-ர்)

## பிரச்சனை அசாம்

புதுடில்லி அக், 22

அசாம் பிரதேசத்தில் வெளியார் பிரச்னை பற்றி பேச்சுவார்த்தை நடத்த பாரத மத்திய அரசு ராஜ்ஜிய சபாவின் ஐந்து பிரதான எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

பாரதத்தின் வெளிப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் அசாம் பிரதேசத்தில் குடியேறுவது தொடர்பான பிரச்னையைத் தீர்த்து லவக்கவே இந்தப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.

## இலங்கைச் செய்திகளுக்கு முக்கியத்துவம்

லண்டன் அக். 22

இலங்கைச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பத்திரிகையொன்று லண்டனில் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

'ஏசியன் டைம்ஸ்' என்ற இப்பத்திரிகை பிரிட்டனிலும், ஆசிய நாடுகளிலும் விற்பனை செய்யப்படும்.

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற புதன்கிழமை இரவு.

மணி பத்தரை.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் பொருட்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சேவை நீடிக்கப் படுகிறது.

இரவு. பத்து முப்பத்து ஒன்று. விசேடசேவை ஆரம்பிக்கப்பட்டு முதல் பாடல்.........

''ஆனை முகத்தான்...... ஐந்து கரத்தான்...... ஆறு முகத்தான் அவதரித்தான்......''

சீர்காழியின் குரல் கணீரென்று கேட்டது!

'ஊடுருவி'

## ''உள்ளூர் வாலிபர் வேலைவாய்ப்பில் நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்''

(நெடுந்தீவு)

''கடந்த காலங்களில் இருந்ததைவிட இப்போது ப.நோ. கூ. சங்கம் சிறப்பான பயனை இத்தீவகத்திற்குச் செய்து வருகிறது. அதன் செயற்பாடுகளை நாம் மென்மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். பொதுச்சபையைச் சேர்ந்துவர்கள் சங்கத்தில் குறைபாடுகள் இருப்பின் அதனை நிருவாகத்திடம் நேரடியாகக்கூறி, குறைகளை நீக்கி, மக்கள் நல்ல பயனைப்பெற உதவியளிக்க வேண்டும் ப நோ. கூ. சங்கம் கல்விக் குழுக்களை ஒவ்வொரு பதியிலும் அமைத்து, படித்துவிட்டுத் தொழில் வசதிகளைப் பெறமுடியாது தவித்துக்கொண்டிருக்கும் ஏழை மக்களுக்குத் தொழில் பயிற்சிகளைப் பெறக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ள பாராட்டுக்குரியது'' என நெடுந்தீவு மத்திய கிராமோதய சபைத் தலைவர் திரு. க. அந்தோனிப்பிள்ளை நெடுந்தீவு கிழக்கு மகளிர் குழுக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

கல்வி உத்தியோகத்தர் செல்வி டெய்சி அல்பிரட் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நெடுந்தீவு ப. நோ. கூ, சங்கப் பொது முகாமையாளர் திரு. இரா. தருமலிங்கம் பேசும்போது ''தகுதியிருந்தும் வசதிகள் இல்லை என்பதனால் தரமான தொழில் வாய்ப்புக்களைப் பெறமுடியாதிருக்கும் எம்மூர் இளைஞர்களும் யுவதிகளும் ஏதோ தமது அன்றாடவாழ்க்கையைக் கொண்டு செலுத்தக்கூடியதாக இன்று இருப்பதெனின் பகுதி வேறுபாடின்றிக் கூட்டுறவுச் சங்கத் தலைமைசகலருக்கும் சம வாய்ப்புக்களைந் தொழில்துறையில் வழங்கிவருவதும் பனம் பொருள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அக்கறை செலுத்திப் பயிற்சி நிலையங்களையும் கொள்வனவு நிலையங்களையும் ஆரம்பித்து வருவதும் முக்கிய காரணங்களாகும். உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது பொருட்களைச் சங்கத்திற்கு விற்பனை செய்வதால் கூடுதல் லாபம் பெறுவார்கள்'' என்றார்.

## கோயம்புத்தூர் சிறந்த மாவட்டம்

சென்னை, அச், 22

தமிழகத்தின் சிறந்த மாவட்டமாக கோயம்புத்தூர்மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசினால் தமிழகத்தின் 315 மாவட்டங்களுக்கிடையே நடத்தப் பட்ட இத்தெரிவின் போதே கோயம்புத்தூர் மாவட்டம் தமிழகத்தின் முதல் தரமான சிறந்த மாவட்டமாகத் தெரிவு பெற்றது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.